# நகரை உலுக்கிய அர்த்தராத்திரி குண்டுகள்




பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 3-00

# முரசொலி

முரசு 04 ஒலி 151 சனி 14-07-1990 (ஆனி 30) துலஹஜ் 20


யாழ்.கோட்டைப் பகுதியிலிருந்து நேற்று முன்னிரவிலிருந்து நடுநிசிவரை குண்டுச் சத்தங்கள்கேட்டவண்ணமிருந்தன. அடிக்கடி எழுந்த மிகப்பலமான குண்டு வெடி ஓசையால் நகர்ப் பகுதி உள்ளிட்ட அயல் கிராம மக்களும் அச்சம் கொண்டனர். உறக்கம் கலைந்தனர் பலாலி முகாமிலிருந்தும் ஷெல்கள் நகரை நோக்கி ஏவிவிடப்பட்டன, நகரின் பல பாகங்களிலும் இவை விழுந்து வெடித்தன எனினும் சேதவிபரங்கள் குறித்து அறியப்படவில்லை இதே சமயம் நள்ளிரவுக்குப் பின் இடையிடையே கோட்டைப் பகுதியை நோக்கி விடுதலைப் புலிகள் துப்பாக்கி வேட்டுகளையும் தீர்த்தனர். (ஸ்ரீ)

## கொக்காவில் புலிகளின் வேகத்தாக்குதலின் பின்


1. ரூபவாஹினிக் கோபுரம் தகர்ந்தநிலை 2. புலிகளினால் புல்டோசர் மூலம் முகாம் நிர்மூலமாகிறது 3. ராணுவ பவல் (கவசவாகனம்) சிதைந்தபடி

(ஸ்தலத்திலிருந்து நமது நிருபர் கே. சந்திரசேகரம்)

● அல்லலுற்று ஆழி கடந்துவரும் தமிழ் உயிர் காக்க தமிழ் நாட்டில் இதய பூர்வ ஈடுபாடு

# கல்யாண மண்டபம் முதல் சத்திரம் வரை அடைக்கலம்

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஸ்ரீலங்கா இராணுவத் தாக்குதலின் கொடூரம் தாங்க முடியாமல் விரக்தியின் விளிம்பில் நின்று தவிக்கும் தமிழர்கள் இலட்சக் கணக்கில் தமிழகம் வந்து சேரக்கூடும் எனத் தமிழக அரசு எதிர்பார்ப்பதாக நேற்றுத் தெரிவிக்கப் பட்டது.

தமிழகத்தில் ஈழத் தமிழ் கதிகளுக்காக கல்யாண ண்டபங்கள் முதல் சத்திரங் ள் வரை வசதி செய்யப்பட வண்டுமென கலைஞர் மு. கருணாநிதி தலைமையிலான மாநில அரசு பணித்துள்ளது.

இருபதாயிரத்துக்கும் மேற்பட்ட அகதிகள் இதுவரை தமிழகம் வந்து சேர்ந்துள்ளதாக மாநில அரசு வட்டாரங்கள் கூறின.

சராசரி நாளாந்தம் மூவாயிரம் அகதிகள் ராமேஸ்வரம் பகுதியை வந்தடைந்ததாகவும் தகவல்கள் வெளியாகின.

இவர்களுக்குரிய சகல வசதிகளையும் செய்து கொடுக்குமாறு அரசு பணித்துள்ளது.

ராமேஸ்வரம், மண்டபம், உள்ளிட்ட பல முகாம்கள் அகதிகளால் நிரம்பி வழிவதால் மாநிலத்தின் ஏனைய மாவட்டங்களிலும் புதிய முகாம்கள் அமைக்கப்படுகின்

—4 ஆம் பக்கம் பார்க்க



## குருநகர் பகுதியில் குண்டுவீச்சு 12வீடுகள் சேதம்; மூவர்காயம்

நேற்று மாலை குருநகர்ப் பகுதியில் இடம் பெற்ற விமானக் குண்டு வீச்சில் 12க்கும் மேற்பட்ட வீடுகள் பலத்த சேதத்திற்குள்ளாகியதுடன் மூவர் படுகாயமடைந்தனர். காயமடைந்தோர் பாஷையூர் திருச்சிலுவை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

2 விமானங்கள் ஆகாயத்தில் வட்டமிட்டு ஒருவிமானம் குருநகர்ப் பகுதியில் குண்டுகளையும் மற்றைய விமானம்

—4 ஆம் பக்கம் பார்க்க

## ஈரோஸ் 13 எம். பிக்கள் 19-ல் ராஜினாமா

ாஸ் பாராளுமன்ற னர்கள் எதிர்வரும் 19 திகதி தமது உறுப்பினர் ளை ராஜினாமா செய் ளனர் என நம்பிக்கையான வட்டாரங்களில்இருந்து தெரியவருகிறது.

● கிழக்கில் நடாத்தப்படும் இனப்படுகொலை உடன் நிறுத்தப்பட வேண்டும்.

● தமிழ்ப் பிரதேசங்களில் நடாத்தப்படும் கண்மூடித்தனமான விமான, ஷெல் தாக்குதல்கள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

● இடை நிறுத்தப்பட்ட அரச - புலிகள் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்

—4 ஆம் பக்கம் பார்க்க

## திருமலை 10ம் கட்டையில் மோதல் 5 இராணுவம் பலி, 6 பேர் காயம்

நேற்று திருமலை பத்தாம் கட்டை இராணுவ முகாம், வில்கம் இராணுவ முகாம் ஆகியவற்றிலிருந்து புறப்பட்ட ஸ்ரீலங்கா இராணுவத்தினர் நிலாவெளி காட்டுப் பகுதிக்கு வந்ததாகவும் இவர்கள் மீது புலிகள் நடாத்திய தாக்குதலில் ஐந்து இராணு

— 04 ஆம் பக்கம் பார்க்க


## பின் போடுவதென அரசுமுடிவு

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான தேர்தலைத் தயக்கத்துடன் பின்போட வேண்டியுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

அவசரகால ...

சட்டத்தின் கீழ் இதற்கான உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது

வடக்கு, கிழக்கில் தேர்தல் நடத் ... ிலை




## சிறிய செய்திகள்

### மாதகல் கடலில் பீரங்கிவேட்டுகள்

(மாதகல்)

மாதகல் கடலில் நங்கூரமிட்டிருக்கும் கடற்படைப்படகுகளிலிருந்து அடிக்கடி பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்படுகின்றன.

இதனால் கரையோரப் பகுதிகளில் குடியிருக்கும் மக்கள் தமது வீடுகளை விட்டு இடம் பெயர்ந்து வருகின்றனர்.

மயிலிட்டி, வல்வெட்டித்துறை போன்ற இடங்களில் இருந்து அகதிகளாக இங்கு வந்தவர்கள் இந்நிலைமையினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். 3.கி

### கொழும்பு கொலைகள் தொடர்கின்றன

கொழும்பில் தொடர்ந்தும் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படுவதாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவிக்கின்றனர். இவ்வாறு கைது செய்யப்படும் சிலர்பின்னர் காணாமல் போய்விட்டதாக அதிகாரிகள் கூறுகின்றனராம். (கி)

### பனம் வெல்லம் உற்பத்தி

குடாநாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சீனித் தட்டுப்பாட்டை ஓரளவு நிவர்த்தி செய்யும் வகையில் சாவகச்சேரி தெங்கு பனம்பொருள் விற்பனவுச்சங்கம் பனம் வெல்லம் உற்பத்தி செய்து பொது மக்களுக்கு பனம்பொருள் விற்பனவு நிலையத்தினூடாக கிலோ அறுபது ரூபாவுக்கு விற்பனை செய்து வருகிறது.

பெருமளவு பொதுமக்கள் இவ்வெல்லத்தை கொள்வனவு செய்வதைக் காணக் கூடியதாக உள்ளது.

யாழ். மாவட்டத்தில் இருபத்திமூன்று சங்கங்கள் இருந்த போதிலும் சாகச்சேரி சங்கமே வெல்ல உற்பத்தியில் ஈடுபடுவது குறிப்பிடத்தக்கது(ப.3கி)

### பக்தர்களை ஹெலி சுட்டது

கடந்தவாரம் மாவைக்கந்தன் ஆலய பத்தாம் திருவிழா அன்று பக்தர்களை நோக்கி ஹெலி சுட்டது.

இச் சம்பவத்தில் எவரும் காயமடையவில்லை. (48கி)

### பொருட்கள் சேகரிப்பு

(மட்டுவில்)

வன்முறைகளால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்துள்ள அகதிகளுக்கு உதவும் பொருட்டு தென் மட்டுவில் இளைஞர் மன்றம் உடைகள், உணவுப் பொருட்கள் போன்றவற்... பொது மக்களிடமி...

### கல்வி அதிகாரிகள் கூட்டம்

யாழ். மாவட்டத்தில் கோட்டங்களுக்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கொத்தணி அதிபர்கள், தேசிய பாடசாலை அதிபர்கள் ஆகியோருக்கான கூட்டம் 16-ம் திகதி திங்கட்கிழமை காலை 9,30 மணிக்கு நல்லூர் ஸ்தான சி. கி. த. க. பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்திற்கு வரும்பொழுது அண்மையில் சேதமடைந்த பாடசாலைகளின் விபரங்கள், அகதிமுகாம்களாக உள்ள பாடசாலைகளின் விபரங்கள், தற்போது இயங்கும் பாடசாலைகளின் விபரங்கள் ஆகியவற்றைச் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் கொண்டுவருதல் வேண்டுமென வடபிராந்திய கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார். (கி)

### விஞ்ஞானபீட பரீட்சை முடிவுகள்

யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீட முதலாம் வருட பரீட்சை முடிவுகள் வெளியிடப் பட்டுள்ளன. இப் பரீட்சையில் 67 பேர் சித்தியடைந்துள்ளனர். (கி)

### கலைப்பீட பரீட்சை முடிவுகள்

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட (கலை, வர்த்தக, முகாமைத்துவ) முதலாம் வருட பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

கலைத்துறையில் 255 பேரும், வர்த்தகத்துறையில் 92 பேரும், முகாமைத்துவத் துறையில் 52 பேரும் சித்தியடைந்துள்ளனர். (கி)

### பங்கீட்டு அட்டை விநியோகம்

(நாயன்மார்கட்டு)

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இதுவரை குடும்பப்பங்கீட்டு அட்டை பெறாதவர்களுக்கு அவற்றை வழங்க உதவி அரசாங்க அதிபர் எஸ். முருகேசம்பிள்ளை உடன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

குடும்ப பங்கீட்டு அட்டை பெறவிரும்புவோர் தங்கள் பகுதிகளிலுள்ள கிராமசேவையாளர்களிடம் சென்று உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்தைப் பெற்று தங்கள் பகுதிகளிலுள்ள கூட்டுறவுக் கிளைகளில் உள்ள முகாமையாளர்களிடம் ஒப்படைத்து பங்கீட்டு அட்டையைப் பெற்றுக்கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர். (33 கி)

மிகிந்தலையில் தமிழ்ப் பயணிகள் மீது

# புத்தபிக்கு தலைமையில் காடையர் தாக்குதல்

'சிங்களக் காடையர்களிடம் இருந்து தப்பி வந்த எம்மை மிகுந்தலையில் வைத்து பௌத்தபிக்கு ஒருவர் தலைமையிலான கோஷ்டியொன்று தாக்கியது.

இவ்வாறு கொழும்பிலிருந்து தப்பி வந்த திருமதி. சண்முகராஜ் தனது பயங்கர அனுபவத்தை எமது நிருபரிடம் தெரிவித்தார்.

கடந்த மாதம் 18-ம் திகதி போக்குவரத்துப் பாதிக்கப்பட்ட நேரம் கொழும்பிற் தங்கியிருந்த நாம் எமது ஊர் நோக்கிச் சென்றுவிட வேண்டும் என்ற நோக்கோடு லொறி ஒன்றை வாடகை பேசி 90 பேர்களுடன் புறப்பட்டோம்.

எமது லொறி இரவு 11 மணியளவிற் புத்தளத்தை அடைந்து அங்கு தங்கி அதிகாலை மூன்று மணியளவில் யாழ். நோக்கிப் புறப்பட்டது. புறப்பட்டுச் சிறிது நேரத்தில் எமது லொறி மறிக்கப்பட்டு இரு காடையர் லொறிச் சாரதியைக் கத்தியாற் காயப்படுத்தினர். பின்னர் லொறியை ஒதுக்கிடத்தில் நிறுத்தி ஒவ்வொருவராக இறங்கிவரப் பணித்தார்கள். எமது லொறியில் 30 பேர் வரை பெண்கள் சகலரிடமிருந்தும்பணம்கொள்ளையடிக்கப்பட்டது. பின்னர் எம்மைப் போகவிட்டனர்.

நாம் மதவாச்சிவரை வந்தோம். தொடர்ந்து பயணம் செய்ய அனுமதி கிடைக்கவில்லை. திரும்பிச் செல்வது தான் நல்லது என எண்ணி திரும்பவும் கொழும்பு நோக்கிச் சென்றோம். மிகுந்தலைக்கு அண்மையில் பொலிஸார் எமது லொறியை மறித்தனர். அவ்விடத்தில் பொது மக்கள் கூட்டம் கூடி எம்மை பலவாறு அடித்துத் துன்புறுத்தினர். உயிருடன் கொளுத்தப் போவதாக பயமுறுத்தினர். பொலிஸ் பொறுப்பு அதிகாரி உரிய நேரத்தில் தலையிட்டு வேறு ஓர் இடத்தில் தங்கவைத்தார்.

இரவு நேரம் பிக்குவின் தலைமையில் ஒரு கோஷ்டி எமது இடத்துக்கு வந்தது பிக்கு எமது முகத்துக்கு நேரே டோர்ச்லைட் அடித்து பார்ப்பார். பார்த்தபின் அவர் கோஷ்டியினருக்கு கண்காட்டுவார். அதற்கேற்ப நாம் தாக்கப்பட்டோம். புத்த பிக்குவின் இச்செயலால் பல ஆண்கள் கடுமையான காயங்களுக்கு ஆளானார்கள். பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு தெரிவித்தால் எம்மை இரவோடு இரவாக வெட்டிக் கொல்லப்போவதாகவும் பயமுறுத்தினர்.

நாம் ஒருவாறு அங்கிருந்து தப்பி கெக்கிராவை அடைந்தோம். அங்கு பொலிஸ் அதிகாரி எம்மை கவனமாகப்பாதுகாத்து ஒரு ஆளுக்கு ஐம்பது ரூபா தந்து கொழும்புக்கு அனுப்பி வைத்தார். இவ்வாறு அவர் தனது அனுபவத்தைத் தெரிவித்தார். (ப-6கி)

## நாட்டுக்கு 'சேவை' புரிய இவர்களும் இப்போ தயார்

இலங்கை இராணுவத்திற்குப் புதியவர்களைச் சேர்த்துக் கொள்வதற்காக அழைப்பிதழ் இல்லாத திறந்த நேர்முகப் பரீட்சை கடந்த 20-ம் திகதி முதல் நடாத்தப்பட்டு வருகின்றதல்லவா?

'புலிகளுக்கு எதிரான போருக்கு' எனச் சாயமூட்டப்பட்டதால் இந்த நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றவென காலிமுகத் திடலில் சிங்கள இளைஞர் அணி அலை மோதியது.

இவர்களுள் கணிசமான அளவினர் சிறுவர்கள், அதைவிட இந்த நேர்முகப் பரீட்சைக்கு மற்றொரு பிரிவினரும் வந்திருந்தனர்.

மஞ்சள் உடை தரித்த உலகப் பற்றை முற்றிலும் துறந்த பௌத்த பிக்குகள்தான் அவர்கள். (கி)

இறந்தோர்தொகை 59ஆக அதிகரிப்பு

## கொக்காவில் தாக்குதலில் ஆறு இராணுவ அதிகாரிகள் பலி

கொக்காவில் இராணுவ முகாம் விடுதலைப் புலிகளினால் தாக்கப்பட்ட சமயம் கொல்லப்பட்ட இராணுவத்தினரில் இரண்டு பேர் கப்டன். தரத்திலான அதிகாரிகள். நால்வர் லெப்ரினன் தரத்திலானவர்கள்.

இத்தகவலை பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ளது.

'கொக்காவில் இராணுவ முகாம் புலிகளினால் முற்றுகையிடப்பட்ட சமயம் வவுனியாவிலிருந்து மேலதிக படையினரை அங்கு அனுப்ப உடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால் விடுதலைப் புலிகளின் கண்ணி வெடிகள் காரணமாக அந்த முயற்சி வெற்றி அளிக்கவில்லை.

இப்படிப் பாதுகாப்பு அமைச்சினால் தொடர்பு சாதனங்களுக்கு வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடைசியாகக் கிடைத்த செய்திகளின்படி கொக்காவில் சம்பவத்தில் இறந்த இராணுவத்தினரின் தொகை 59 ஆக அதிகரித்துள்ளது. (கி)

### அபராதம்

சுன்னாகத்தில் ஒரு கி... சீனி நாற்பது ரூபாவு... விற்பனை செய்த வர்த்த... ஒருவருக்கு அபராதம் வி... கப்பட்டுள்ளது. (48.கி)

### பாடசாலை சேத...

மயிலிட்டி கலைமகள் வி... தியாலய அலுவலகம் விட... னத் தாக்குதலால் சேத... டைந்துள்ளது. இங்கிரு... தஸ்தாவேஜுகளும் சே... டைந்துள்ளன. (4...


## முக்கிய அறிவித்தல்

வெளி மாவட்டத்திலிருந்து இடம்பெயர்... அகதிகளுக்கு உதவும் வகையிலும் கல்வி ... பந்தமாகவும் ஓர் கலந்துரையாடல் நடத்... வதற்கு எமது கல்வி நிறுவன மாணவர்க... ஆசிரியர்களும் 'விக்னா' கல்வி நிறுவ... மண்டபத்தில் 16-7-90 காலை 9-00 மணிக்... தவறாது சமூகமளிக்க வேண்டப்படுகின்றன...

—அதிப...

07013

...ன்னிப்பாகக் கவனிப்பதாக பிரிட்டிஷ் அமைச்சர் தகவல்

# இலங்கை விவகாரத்தில் பிரிட்டன் தலையிடும்?

'இலங்கையில் தற்பொழுது நடைபெற்று வரும் விடயங்கள் குறித்து பிரிட்டன் உன்னிப்பாகக் கவனித்து வருகின்றது'

இவ்வாறு பிரிட்டிஷ் வெளியுறவு பொதுநல அமைப்பு ராஜாங்க அமைச்சர் பெரி பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் தெரிவித்திருக்கிறார்.

இலங்கையில் வடக்கு-கிழக்குப்பகுதியில்மீண்டும்|சண்டைமூண்டிருப்பது குறித்து பிரிட்டிஷ அரசாங்கம் பல தகவல்களைப் பெற்றுள்ளது.

இலங்கையில் தற்பொழுது என்ன நடைபெறுகின்றது என்பது குறித்து அறிய பிரிட்டிஷ் அரசு இந்திய அரசுடன் தொடர்ச்சியாகத் தொடர்பு கொண்டுவருகின்றது.

இவ்வாறேகொழும்பிலுள்ள பிரிட்டிஷ் தூதுவராலயமும் இலங்கை அரசுடன் அடிக்கடி தொடர்பு கொண்டு வடக்கு, கிழக்கு நிலைமைகுறித்து தகவல்களைப் பெற்றுவருகின்றது.

இவ்வாறு பாராளுமன்றத்தில் அமைச்சர் பெரி தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை விடுதலைப் புலிகளுக்கும் - அரசுக்கும் இடையே பேச்சுவார்த்தை ஒன்று நடக்கும் பட்சத்தில் அதற்கு மத்தியஸ்தம் வகிக்க பிரிட்டிஷ் அரசு முன்வரும் என கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் தூதுவர் தெரிவித்திருக்கிறார்.

செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அவர் சமாதானப் பேச்சுக்கு மத்தியஸ்தம் வகிக்குமாறு பிரிட்டனை இதுவரை எத்தரப்பும் கோரவில்லை எனவும் தெரிவித்தார். (கி)

சாவகச்சேரிப்பகுதியில்

## கசிப்பு உற்பத்தியை ஒழிக்க தீவிர நடவடிக்கை

சாவகச்சேரி தெங்கு பனம் பொருன் உற்பத்தி விற்பனவுச் சுங்க திடீர் பரிசோதனைக் குழுவினரும் விடுதலைப் புலிகளின் விஸ்தரிப்பு உத்தியோகத்தர்களும் இணைந்து சாவகச்சேரிப் பகுதியில் கசிப்பு உற்பத்தியை ஒழிப்பதற்கு நடவடிக்கைகளை தீவிரப் படுத்தியுள்ளதாக சங்கப் பொது முகாமையாளர் வே. கிருஷணன் தெரிவித்தார்.

அண்மையில் இக்குழுவினர் கெருடாவில் மீசாலை சாவகச்சேரி ஆகிய இடங்களில் கசிப்பு உற்பத்தி செய்த நான்குஇடங்களைகண்டுபிடித்தனர் உற்பத்திப் பொருட்களை பறிமுதல் செய்ததுடன் ரூபா இருபத்தையாயிரம் வரை தண்டப்பணம் விதித்ததாகவும் அவர் தெரிவித்தார். (ப 3)

## பனங்கட்டி உற்பத்தியை மேற்கொள்ள கோரிக்கை

சகல தெங்கு பனம் பொருள் உற்பத்தி, விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களும் பனங்கட்டி, பனம் சீனி, பனம் உணவுப் பொருள் உற்பத்தியில் ஈடுபட வேண்டுமென விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி கேட்டுள்ளது.

பனங் கள் இறக்குவதற்குப் பாவிக்கப்படும் பனைமரங்களிலிருந்து பதநீர் உற்பத்தி செய்து எமது பிரதேசத்திற்குத் தேவையான பனங்கட்டி பனம் சீனி, குளிர் பானம் போன்ற ஏனைய உப உணவுப் பொருட்களை உடனடியாக உற்பத்தி செய்து மக்களின்அத்தியாவசியதேவையை ஓரளவிற்காவது பூர்த்தி செய்யக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

எனவே கள் உற்பத்தியை நிறுத்தி மேற்கூறிய பொருட்களின் உற்பத்தியில் ஒத்துழைப்பு வழங்கப்படல் வேண்டுமெனவும் மக்கள் முன்னணி கேட்டுள்ளது.

## நெருப்பு..... அதுவும் இல்லை

தீப்பெட்டிக்கு தற்போது யாழ்குடாநாட்டில் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. இத் தட்டுப்பாடு கொழும்பு—யாழ். போக்குவரத்து சேவை நடை பெறாததினால் இந் நிலைஏற்பட்டுள்ளது. (68 கி)

## முல்லைத்தீவில் ஷெல் தாக்குதல்; திருமலை அகதிகள் இடம்பெயர்வு

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் தங்கியிருந்த திருமலை மாவட்ட மக்கள் கடந்த சில தினங்களாக படகுகளினூடாகவும் கால் நடையாகவும், வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு வந்து கொண்டிருக்கிறார்கள்.

முல்லைத்தீவுப் பகுதியில் தங்களுக்கு பாதுகாப்பு இல்லையெனவும், அங்கு அடிக்கடி ஷெல் தாக்குதல்களும் ஹெலித் தாக்கு ல்களும் மேற்கொள்ளப் படுவதாகவும் அதன் காரணமாகவே தாங்கள் வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு வந்ததாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

முல்லைத்தீவில் இருக்கும் போது தங்களுக்கு உணவு' சுகாதாரம் போன்ற வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை என்றும் இடம்பெயர்ந்து வந்த மக்கள் தெரிவிக்கின்றனர். (43கி)

ரஞ்சனின் நேற்றைய ஜோக்

## ''புலிகள் மணலுக்குள்புதைந்து படையினருக்கு தப்புகிறார்கள்''

''விடுதலைப்புலி போராளிகள் படையினரிடம் இருந்து தப்புவதற்காக கடற்கரை மணலுக்குள் தலையை புதைத்துக்கொண்டு மூச்சை யடக்கி பதுங்குகிறார்கள்.''

அமைச்சர் ரஞ்சன் நேற்றுப் பத்திரிகையாளர்களுக்குத் தெரிவித்த இதுதகவ‍ே.

இப்படிப் பதுங்கியிருந்த 38 பேரை திருமலையில் படையினர் கண்டு பிடித்தனர். அவர்கள் வெளியே மூச்சு விடுவதற்கு குழாய்களைப் பயன் படுத்துகிறார்கள் எனவும் அமைச்சர் தெரிவித்திருக்கிறார். (கி)

வடக்கிற்கு

## இராணுவ பொறுப்பாளராக கொப்பேகடுவ நியமனம்

வடக்கு மாகாண இராணுவ பொறுப்பர்ளராக மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் இதுவரை கிழக்கு மாகாணத்தில் இராணுவ நடவடிக்கைகளுக்கு பொறுப்பாளராகக் கடமையாற்றி வந்தார்.

கிழக்கு மாகாணத்தில் இராணுவ பொறுப்பாளராக மேஜர் ஜெனரல் டெரி சில்வா புதிதாக நியமிக்கப்பட்டுள்ளார்.

வடக்கிற்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ 1987 ஆம் ஆண்டு வடமராட்சிப் பகுதியில் இடம்பெற்ற 'லிபரேசன் ஒபரேஷன்' நடவடிக்கைகளுக்குத் தலைமை தாங்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## விலை வீழ்ச்சி

சாவகச்சேரி சந்தையில் மரக்கறி, மீன், கருவாடு வாழைப்பழம் ஆகியவற்றின் விலை பெருமளவு வீழ்ச்சியடைந்துள்ளது.

## வாழைத்தண்டுக்கு வந்தது மவுசு

வாழைநாரின் தும்பில் இருந்து கைப்பணிப்பொருட்கள் செய்யும் கைத்தொழில் முயற்சியொன்று நல்லூர் முருகன்சனசமூகநிலையத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இக் கைத்தொழில் மூலம் தளவிரிப்புகள், மேசைவிரிப்புகள் போன்ற பல பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. நாவலர் வீதியில் அமைந்துள்ள ஹூக் அன்ஜில் மண்டபத்தில் இதற்கான வகுப்புகள் தற்போது நடைபெற்றுவருகின்றன.

இவ் வகுப்பில் சேரவிரும்புவோர் சனசமூக நிலையத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர், இப் பயிற்சி வகுப்பு ஒரு மாதகாலத்திற்குரியதாகும். இந்த கைத்தொழில் முயற்சி ஆரம்பிக்கப்பட்டதையடுத்து வீதிகளில் வீசப்படும் வாழைக் குற்றிகளுக்கு மவுசு வந்து விட்டது. (3கி

## களம் பல கண்ட யாழ். கோட்டை (7)




ஒல்லாந்தர் இந்தப் பன்ரகன் அமைப்புக்கோட்டைக்குள் 350 இராணுவ வீரர்களைக் கொண்டிருந்தனர். இவர்களில் 287 பேர் ஐரோப்பியர்களாகவும் 56 பேர் துப்பாசிகளாகவும் 56 மெஸ்ரியர்களும் இருந்தனர். துப்பாசிகள் என்பது பறங்கிகளுக்கும் சுதேசிகளுக்கும் பிறந்த பிள்ளைகளைக் குறிக்கும். வடமாகாணத்தில், அதாவது யாழ்ப்பாண கொமுசாறிபிரிவில் இருந்த ஆறு கோட்டைகளில் அதிக படை வீரர்களைக் கொண்டிருந்த கோட்டை யாழ்ப்பாணக் கோட்டையாகும்,

ஒல்லாந்தரின் யாழ்ப்பாணக் கோட்டைக்குள் கொத்தளங்களிலிருந்த பீரங்கிகளைவிட 64 பீரங்கிகளை இழுக்கும் வண்டில்களுமிருந்தன, அவற்றிலும் பீரங்கிகள் பொருத்தப்பட்டிருந்தன. 57 ஆயிரம் இறாத்தல் வெடிமருந்து ஒல்லாந்தக்கோட்டையில் எப்போதும் இருந்தது. 350 சேனா வீரர்களுடன் 31 ஆராய்ச்சிமாரும், 4 கங்காணிகளும், 799 லாஸ்கொறின்சுகள் கொண்ட படையும் கோட்டைக்கு வெளியில் யாழ்ப்பாணப் பரப்பில் இருந்தனர் கோட்டைக்குள்ளிருந்த கிறிஸ்தவ தேவாலயம் இருபாலையில் இதற்கென அரிவிக்கப்பட்ட செங்கற்களினால் கட்டப்பட்டது. இச் செங்கற்களுக்கு ஆயிரத்துக்கு மூன்றரைப்பணம் கொடுக்கப்பட்டது.

ஒல்லாந்தரால் தென்கிழக்காசியாவில் கட்டப்பட்ட கோட்டைகள் அனைத்திலும் பெரியதும், பலமானதும் யாழ்ப்பாணக் கோட்டையாகும்.

யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் யாழ்ப்பாணத்தையும் அதனைச் சார்த பகுதிகளையும் தத்தம் ஆட்சிக்காலத்தில் நிர்வகித்தனர். அதனால், யாழ்ப்பாணக் கோட்டையை யாழ்ப்பாண மக்கள் 'இராசவாசல்' என அழைத்தனர். போர்த்துக்கேயர் யாழ்ப்பாணப் பிரதேசத்தை 32 கோவிற் பற்றுக்களாகப் பிரித்தனர். ஒவ்வொரு கிறிஸ்தவ தேவலாயமுள்ள ஒவ்வொரு பகுதியும் ஒவ்வோரு கோவிற்பற்றாக அவர்களால் கருதப்பட்டது. தேவாலயமில்லாத பகுதிகளில் பற்றுக்கு ஒரு தேவாலயமாக அமைத்தனர். நல்லூர், சுண்டிக்குளி, வண்ணார்பண்ணை, பண்டத்தரிப்பு, வட்டுக்கோட்டை, உடுவில், மல்லாகம், தெல்லிப்பழை, மயிலிட்டி,

★ செங்கை ஆழியான்

அச்சுவேலி, புத்தூர், கோப்பாய், உடுப்பிட்டி, கட்டைவேலி பருத்தித்துறை, நாவற்குளி, சாவகச்சேரி, கச்சாய், வரணி எழுதுமட்டுவாள், முகாமலை, புலோப்பளை, தம்பகாமம் முள்ளிப்பற்று, முதலான 34 கோவிற் பற்றுக்களாகப் பிரி... கப்பட்டிருந்தது. கோட்டையை அடுத்த பகுதி 'சீதாரி... எனப்பட்டது. இது சுண்டிக்குளி கோயிற் பற்றுட... இருந்தது. இந்த ஒவ்வொரு கோயிற்பற்றுக்கும் ஒவ்வோ... தமிழ்ப் பிரதிநிதிகள் நிர்வாகத்திற்குத் துணை செய்பவ... களாக நியமிக்கப்பட்டனர். அந்த அந்த கோயிற்பற்றி... உயர்குலத்தாலும், செல்வாக்காலும், நாட்டாண்மையா... விளங்கிய ஒருவர் இப்பதவியை வகித்தார்.

போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தை ஆண்டபோது நல்லூருக்குப் புலிநாயக முதலியாரும் கச்சாயப் பகுதிக்கு திசைவீரசிங்க வன்னிமையும் நிர்வாகிகளாக விளங்கினர், கச்சாய் வன்னிமைமிகுந்த செல்வாக்குடையவராக விளங்கி... னார். வன்னிப் பகுதிகளிலிருந்து போர்த்துக்கேயப் பறங்... கிகளின் யானைத்திறையை அவர் சேகரித்துக் கொடுப்ப... தால் அவருக்கு இராசவாசலில் மிகுந்த செல்வாக்கிருந்... தது. அவருக்கு ஒருநாள் விசித்திரமான ஆசை ஒன்று தோன்றியது. தனக்கு ஒரு போர்த்துக்கேயப் பறங்கிப் பெண் மனைவியாக வர வேண்டும் என அவர் விரும்பி... னார். அந்த விருப்பத்தை ஒரு நாள் போர்த்துக்கே... கமாண்டரிடம் வெளிப்படையாகக் கூறிவிட்டார். அவனைப் பகைத்துக்கொள்ள விரும்பாத கமாண்டர் போர்த்துக்க... லிருந்து ஒரு பறங்கிப் பெண்ணை கப்பலில் வரவழைத்து கச்சாய் வன்னிமைக்கு வழங்கச் சம்மதித்தார் விஸ்பனிலிருந்... (போர்த்துகல்லின் தலைநகர்)கச்சாய் வன்னிமைக்கு மணமக... வருகிற செய்தி கச்சாய் முழுவதையும் விழாக்கோலம் பூண... வைத்தது. கோச்சி வண்டியில் பறங்கி நாய் ஒன்றினை ஏற்றி மணமகளாகப் போர்த்துகேயர் கச்சாய் வன்னி... மைக்கு அனுப்பி வைத்தார்.

அந்த இழிசெயலுக்குப் பழி வாங்குவதற்காக கச்சாய் வன்னிமை மன்னார் சென்று ஒல்லாந்தரைக் கண்டார். தரைமார்க்கமாக ஒல்லாந்தரைப் பூநகரியூடாக யாழ்ப்பாணத்... துக்கு அழைத்து வந்தவர் கச்சாய் வன்னிமையாவார். ஒல்... லாந்தர் இலகுவாக யாழ்ப்பாணக் கோட்டையைக் கைப்... பற்ற மார்க்கத்தை கச்சாய்வன்னிமை காட்டிக் கொடுத்தார்.

ஒல்லாந்தர் யாழ்ப்பாணக் கோட்டையைக் கைப்பற்றிக் கொண்டனர்.

(தொடரும்)

MURASOLIE REGISTERED AS A NEWSPAPER IN SRILANKA 14-07-1990

### கருவில் திருவோடு பிறந்த தமிழர் இன்று தெருவோடு ஏந்தும் நிலை

# அன்னை பராசக்தியே நீ கேள்!

# என்கிறார் திருமலை மூதாட்டி

(கே-வி.ஆர்-ஸ்ரீ)

"திருகோணமலையே நாம் பிறந்த மண். இன்று நாங்கள் சிங்கள இராணுவத்தாலும் ஊர்க்காவல் படையினாலும் விரட்டியடிக்கப்பட்டு நாதியற்று அலைகிறோம், அல்லலுறுகிறோம். சின்னஞ்சிறு சிறுவர்களைக்கூட நீங்கள் புலிகள் எம் எதிர்காலச் சந்ததி விரோதிகள் என அவர்கள் வெட்டிக் கண்டதுண்டமாக்கிக் கொல்கின்றனர்"

திருகோணமலையிருந்து நேற்றுக்காலை நுணாவில் வந்துசேர்ந்த சுமார் பதினைந்து பேர் கொண்ட குடும்பங்கள் முரசொலிக்குத் தெரிவித்தன: தாம் ஒன்பது நாட்கள் பல்வேறு இடர்களைத் தாண்டி யாழ். மண் வந்து சேர்ந்ததாகவும் அக்குடும்பங்கள் கூறின,

படகுகள் மூலம் தப்பி தம் உயிரைக் காப்பாற்ற முனையும் தமிழர் கூட்டம் ஒரு பவுண் தங்கத்தை ஐந்நூறு ரூபாவுக்கும் விற்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

லட்சம் பெறுமதியுள்ள டிராக்டர்கள் கூட பத்தாயிரம் ரூபாவுக்கும், கார்கள் ஐயாயிரம் ரூபாவுக்கும் விற்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அப்பாவிகள் பலர் தம் கண்முன்னே வெட்டிக் கொல்லப்பட்டதாகத் தாம் கண்டதாகவும் அப்பகுதி முஸ்லிம் மக்களை படையினர் முன்னதாகவே திருமலை நகருக்கு இட்டுச் சென்றதாகவும் அவ்விதம் செல்லும் முஸ்லிம்களைத் தாம் எங்கே செல்கிறீர்கள் எனக் கேட்கையில் எம் உறவினர் வீடு செல்கிறோம், மீள வருவோம் என்று அவர்கள் கூறியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தம் பகுதிகளில் குறிப்பாக தாம் பிறந்த இடமான நிலாவெளியில் ஆண்கள்வாடையே இப்போது இல்லையென்றும் 12 முதல் 45 வயது வரையிலான ஆண்கள் இராணுவத்தால் கடத்திச் செல்லப்படுவதாகவும் அவர்கள் கதி இன்னமும் தெரியவில்லை என்றும் இக்குடும்பங்கள் மேலும் தெரிவித்தன.

தம்மைப்போன்று இன்னும் பெருந்தொகையான குடும்பங்கள் யாழ், குடாநாடு வரத்துடித்துக் கொண்டிருப்பதாகவும் உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி அவர்கள் விரக்தியின் விளிம்பில் நிற்பதாக கூறப்பட்டது.

மக்கள் தம் உடு துணிகளைக்கூட விற்றுப் பணம் சேர்த்து இங்குவர முற்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இக்குடும்பங்களில் ஒருவராக வந்திருந்த மூதாட்டி ஒருவர் இப்படிச் சொன்னார்

என்னதான சிக்கல் வந்தாலும் அம்மாளாச்சி இருக்கிறா. அவா கேட்பா, பிச்சைக்காரர்களிலும் பார்க்க நாங்கள் பல கேவலங்கள் பட்டுவிட்டோம்"

ஸ்ரீ

## உணவுப் பொருட்கள் நேற்று வந்து சேர்ந்தன

யாழ் மாவட்டத்திற்கான உணவுப் பொருட்களின் ஒரு பகுதி நேற்று மாலை வந்தடைந்தது. 13 லொறிகளில் வந்து சேர்ந்த இவ் உணவுப் பொருட்கள் தேவைக்கும் போதுமனதாக இல்லாததால் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று வந்த உணவுப் பொருட்கள் உணவுத் தட்டுப்பாட்டின் ஒரு சிறுபகுதியைக் கூட நிரப்பப் போதுமானதாக இல்லையென அதிகாரி ஒருவர் தெரிவித்தார். வழமையான பாவனையில் விற்பனை செய்தால் ஒரு நாளுக்குக் கூட அவ்வுணவுப் பொருட்கள் போதாது என மேலும் அவர் கூறினார்.

5லொறிமா, 1 லொறிஅரிசி 3 லொறிசீனி 1 லொறி பால்மா, 2 லொறி மருந்து ஆகியவைகளே நேற்று வந்த உணவுப் பொருட்களாகும். இவற்றுடன் மற்றுமோர் லொறி சர்வோதயத்திற்கு வந்திருந்தது எனவும் கூறப்பட்டது.

சகல லொறிகளும் நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் உணவுப் பொருட்களை இறக்கின. அங்கிருந்து உணவுப் பொருட்கள் பங்கீடு செய்யப்படவுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டது. (3-ஸ்ரீ)

## புலிகள் தாக்கியதில் நிலைகலங்கி வனத்துள் மறைந்ததாக ஒப்புதல்

கொக்காவில் இராணுவமுகாம் விடுதலைப் புலிகளால் நிர்மூலமாக்கப்பட்டதனை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது.

இராணுவத்தினர் போர்த்தந்திர அடிப்படையில் பின்வாங்கினர் என்றும் பெருமளவில் இராணுவத்தினர்கொல்லப்பட்டுள்ளனர் என்றும் ஒரு இராணுவ வீரர் மாத்திரம் தப்பி மாங்குளம் முகாம் வந்தடைந்தார்என்றும் 15 ராணுவத்தினர்புலிகளின் தாக்குதலை தாக்குப்பிடிக்கமுடியாமல்காட்டுக்குள் ஒடித்தப்பிவிட்டதாகவும் இராணுவ அதிகாரி ஒருவர்தெரிவித்ததாகவும் தகவல் வெளியாகியுள்ளது இதே வேளை கொக்காவில்இராணுவமுகாமில் பலியான சிப்பாய்களின் தொகை 65ஆக உயர்ந்துள்ளதாக விடுதலைப்புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இவர்களது சடலங்களை விடுதலைப்புலி போராளிகள் மீட்டுள்ளனர், அதே சமயம் மேலும் சில சடலங்கள் இடிபாடுகளிடையே சிக்கியிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (-ஸ்ரீ)

## பின்வாங்குகையிலும் தீவைப்பு மாறவில்லை

நேற்று தள்ளாடி இராணுவ முகாமில் இருந்து வந்த ஸ்ரீலங்கா இராணுவத்தினர் திருநாவலில் தரித்து நின்ற சமயம் இவர்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர்.

இத்தாக்குதலினால் நிலைகுலைந்த இராணுவத்தினர் அருகில் முனைத் தோட்டப் பகுதியில் இருந்த ஐந்து வீடுகளை தீக்கிரையாக்கிய பின் முகாமிற்கு பின்வாங்கிச் சென்றதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஸ்ரீ

## பழிக்குப் பழி; பொம்மர் தாக்குதல் மூலமாக

கொக்காவில் இராணுவ முகாம் விடுதலைப் புலிகளினால் தகர்க்கப்பட்டதைத் தொடர்ந்து நேற்றுமுன்தினமிரவு கிளிநொச்சிப் பகுதியில் பொம்மர் தாக்குதல் நடாத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினமிரவு எட்டு மணி முதல் ஒரு மணி நேரமாக இந்த பொம்மர் தாக்குதல் கிளிநொச்சிநகரைக் கலக்கியது.

இத்தாக்குதலில் மூன்று கடைகளும் ஓர் ஆலையும் சேதமடைந்தது. (35-ஸ்ரீ)

## புலிகள் வசம்

கொக்காவில் இராணுவ முகாம் தாக்குதலின் போது தாம் அங்கிருந்து பீரங்கிகள், இயந்திரத் துப்பாக்கிகள் ஆகியவற்றைக் கைப்பற்றியதாக புலிகள் அறிவித்துள்ளனர்

**ஈரோஸ்...**

பட்டு ஒரு சுமுகமான நிலை ஏற்படவேண்டும்.

● வடக்கு - கிழக்கு பகுதிகளுக்கான உணவு, மருந்து, எரிபொருள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களை கொண்டு வருதல் மீதான தடையை நீக்க வேண்டும்.

என்ற 4 அம்சங்கள் அடங்கிய கடிதத்தினை ஜனாதிபதிக்கு ஈரோஸ் அமைப்பினர் ஏற்கனவே அனுப்பியிருந்தனர், ஆனால் இன்று வரை ஜனாதிபதியிடமிருந்து ஆக்கபூர்வமான முயற்சிகள் எதனையும் அரசு மேற்கொள்ள தவறியதால் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது பதவிகளை எதிர்வரும் 19 ஆம் திகதி ராஜினாமா செய்யவுள்ளனர் எனத்தெரிவிக்கப்படுகிறது.

முன்னர் 15 ஆம் திகதிராஜினாமா செய்வார்கள் என திட்டமிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

1989 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் வடக்கு கிழக்கு பகுதியிலிருந்து பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட 13 ஈரோஸ் பாராளுமன்ற உறுப்பினர்களில் யாழ்மாவட்டஉறுப்பினர் திரு இளையதம்பி பரராஜசிங்கம் தற்சமயம் யாழ். மாவட்டத்தில் தங்கியிருந்தால் அவர் தனது ராஜினாமா கடிதத்தை யாழ்பாணத்திலேயே தகுதி வாய்ந்த உயர்அதிகாரி ஒருவரிடம் கையளிப்பார் எனவும் சொல்லப்படுகிறது. (09-ஸ்ரீ

**குருநகர்...**

உணவுப் பொதிகளை கோட்டை முகாமுக்கும் போட்டன. குருநகர்ப் பகுதியில் வீசப்பட்ட மூன்று குண்டுகளில் ஒன்று வெடிக்கவில்லை. இரண்டு குண்டுகள் வெடித்தன.

ஒரு குண்டு ஒடக்கரை வீதியில் உள்ள சீவரத்தினம் என்பவரது வீட்டின் மேல் விழுந்தது. அவ் வீட்டில் இருந்த சிறுமி உட்பட மூன்று சகோதரர்கள் காயமடைந்தார்கள். வனிதா (19) சோபா (18) சாளினி (6) ஆகியோரே காயமடைந்தவர்களாகும்இவ் வீடு முற்றாக சேதமடைந்தது அத்துடன் சுற்றியிருந்த எட்டுக்கும் மேற்பட்ட வீடுகளும் ஒரு கடையும் சேதத்திற்குள்ளாகின.

மற்றைய குண்டு இராஜேந்திரா லேனில் உள்ள பி.எல் சந்தியாகோ என்பவரது வீட்டின்மேல் விழுந்தது வீடு பலத்த சேதமடைந்த போதும்அவ் வீட்டில் உயிரிழப்புக்கள் எதுவும் ஏற்படவில்லை எனினும் அவ் வீட்டைச் சுற்றியிருந்த 5க்கும் மேற்பட்டவீடுகள் சேதமடைந்தன

இத் தாக்குதலையடுத்து அப்பகுதி மக்கள் உடமைகளுடன் வீடுகளை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களை நாடிச் செல்கின்றனர். (03- 68-ஸ்ரீ)

**கல்யாண...**

றன.

ராமேஸ்வரம் வந்தடையும் அகதிகளை பிற மாவட்டங்களுக்கு ஏற்றிச் சென்று தங்க வைக்க விசேட ரயில், பஸ் வசதிகள் மாநில அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு இது தொடர்பான உத்தரவு விடுக்கப்பட்டுள்ளது.

அகதிகளாக வரும் ஈழத்தமிழர் உதவிக்கென மத்திய அரசிடம் நிதியுதவி கோரியுள்ள மாநில அரசு அவர்கள் விடயத்தில் மிகுந்த கரிசனை காட்டி வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஸ்ரீ)

**திருமலை...**

வத்தினர் கொல்லப்பட்டதாகவும் விடுதலைப்புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

விடுதலைப்புலிகள் காட்டுப் பகுதியில் தொடர்ந்து நடாத்திய கண்ணிவெடித்தாககுதலில் ஆறு ஸ்ரீலங்கா இராணுவத்தினர் படுகாயமடைந்ததாகவும் இதைத் தொடர்ந்து ஏனை இராணுவ சிப்பாய்கள் முகாம்களுக்குப் பின்வாங்கி விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதல்களில் புலிகள் தரப்பில் கேதீஸ், அரசன், ஆகிய இரு போராளிகள் வீரமரணமடைந்துள்ளனர். இவர்களுக்கு விடுதலைப்புலிகள் வீரவணக்கத்தை தெரிவிக்கின்றனர். (ஸ்ரீ)

### ஆயுதப்படை நலனுக்காக

## சீனிக் கூட்டுத்தாபனம் ரூ. 5 லட்சம் வழங்கியது

வடக்கு, கிழக்கு மக்கள் அன்றாட அத்தியாவசியத் தேவையான சீனிக்குத்தட்டுப்பாட்டு நிலையினை பெருமளவில் எதிர்நோக்கும் நிலையில் வடக்கு, கிழக்கு யுத்தத்தில் ஈடுபட்டிருந்த ஆயுதப் படையினருக்கு உதவும் வகையிலான தேசிய பாதுகாப் நிதிக்கு ஸ்ரீலங்கா சீனிக் கூட்டுத்தாபனம் ஐந்து இலட்சம் ரூபாவை அன்பளிப்புச் செய்துள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

இந்த அன்பளிப்புத் தொகையை இக் கூட்டுத்தாபனம் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் திரு. ரஞ்சன் விஜயரத்னவிடம் கையளித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இங்கு சீனிக்குப் பெருந் தட்டுப்பாடு நிலவுவதும் தம் மழலைகளுக்கு பால்மா சீனி கலந்து கொடுப்பதற்குக் கூட மக்கள் அலையும் நிலை உருவாகியுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

### கண்கெட்டபின் சூரிய நமஸ்காரம்?

## வட, கிழக்கு பட்டினி வாட்டம் உணர்கிறார் 'பிரேமா' என தெரிவிப்பு

வடக்கு, கிழக்கில் மக்கள் உணவுத் தட்டுப்பாட்டுக்குள்ளாகி இருப்பதனை ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸ கருணைக் கண்ணோட்டத்துடன் நோக்குகிறார் என்று நேற்று அரசாங்கம் தெரிவித்தது.

தமிழ் மக்கள் போதிய உணவு இன்றி அல்லற்படுவதனை ஜனாதிபதி உணர்ந்துள்ளார் என்றும் இம்மக்கள் படும் கஷ்டத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

ஸ்ரீ

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேட்) லிமிறெட் நிறுவனத்தினரால் யாழ். கல்வியங்காடு டச்சுவீதி, 'லக்ஷ்மி பில்டிங்கில் உள்ள அச்சகத்தில் 14-7-90அச்சிட்டு வெளியிடப்பெற்றது,